**தலைப்பு 325 – இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 325 இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 ஜூலை 20 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

1.2 **கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2. **கணக்குகள்**

---

2.1 **ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 136.92 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 89.38 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 47.54 மில்லியன் அதாவது 34.72 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருபவை | 32.27 | 30.62 | 1.65 | 5.11 |
| மூலதனம் | 104.65 | 58.76 | 45.89 | 43.86 |
| மொத்தம் | **136.92** | **89.38** | **47.54** | **34.72** |

## 2.2 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழ் காணப்படும் இலக்கம் 7002/0000/00/0409/0015/000 கொண்ட கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கட்டுநிதி மீதி ரூபா 2.45 மில்லியன் ஆகும்.

## 2.3 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழ் காணப்படும் இலக்கம் 6000/0000/00/0015/0171/000 கொண்ட வைப்புக் கணக்கில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 1.08 மில்லியன் ஆக இருந்தது.

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பாதீட்டு முரண்

05 செலவு விடயங்களில் மிகை நிதியேற்பாடு செய்யப்பட்டுள்ளமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதியேற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் சேமிப்பு அந்த செலவு விடயங்கள் தொடர்புடைய தேறிய ஏற்பாடுகளின் 25 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை வீச்சின் அளவினை கொண்டிருந்தது.

### 3.2 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

#### 3.2.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்று நிருபத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் மீளாய்வாண்டிற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.2.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

2006 மார்ச் 24 திகதிய இலக்கம் 128 கொண்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.2.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தம்பர் 12 திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்று நிருபத்தின் பிரகாரம் அமைச்சினால் கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனினும், அவ் அறிக்கை 2016 ஜூன் 16 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

தலைமை அலுவலகத்தின் களஞ்சியத்தில் நீண்ட காலமாக வினியோகிக்கப்படாமல் காணப்பட்ட ரூபா 164,920 பெறுமதியான 32 பல்வேறு விடயங்கள் அவதானிக்கப்பட்டதுடன் 2010 மற்றும் 2011 ஆண்டுகளின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 113,541 தொகை பெறுமதியான 16 இருப்பு விடயங்களும் அதில் அடங்குகின்றன.

3.4 **சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

---

திணைக்களத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திணைக்களத்திற்காக 6''x9'' அளவினதான கருங்கற்கள் கொள்வனவு செய்யும் போது குறிப்பிட்ட மாகாணத்தில் காணப்படும் கூறுவிலைகள் அல்லது அம்மாகாணத்தில் மாகாண பொறியியலாளர் அலுவலகத்தில் காணப்படும் விலை வீதம் தொடர்பாக கவனம் செலுத்தாமல் மதிப்பீடு செய்யப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 136,030 தொகையொன்று மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிர்மாண வேலைகள் மற்றும் பராமரிப்பு விடயங்கள் தொடர்பான கோவைகள் மற்றும் வேலைப் பத்திரங்கள் மீது பரிசோதனை மேற்கொண்டபோது திணைக்களத்தினால் 2015 ஆண்டிற்கான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்படாமல் நிர்மாண வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைக்காக ஆண்டு பூராகவும் பொருட்கள் கொள்வனவு செய்தல் நடைபெற்றுள்ளது. அப்பொருட்களுக்காக ஆண்டின் போது ஒவ்வொரு விடயங்களுக்குமாக வெவ்வேறாக கூறுவிலைகள் பெற்றுக் கொண்டிருந்தமையால் அனேகமான சந்தர்ப்பங்களில் ஒரே பண்டம் பல்வேறு விலைகளில் அதேபோல் பலவித இனத்தின் கீழும் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. சமர்ப்பிக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கை, பண்டங்களின் தரம் மற்றும் வியாபாரச் சின்னம் மாதிரிகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படாமல் விலையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு செயலாற்றிய சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

3.5 **மனித வள முகாமைத்துவம்**

---

திணைக்களத்திற்காக முகாமைத்துவச் சேவை திணைக்களத்தினால் தனிப்பட்ட பதவியணியினர் அங்கீகரித்திருக்கவில்லை. திணைக்களத்தில் கடமை ஆற்றுவதற்காக இலங்கை கடற்படையைச் சேர்ந்த 71 உத்தியோகத்தர்களும் மற்றும் 1111 மாலுமிகளும் விடுவிப்பு அடிப்படையில் இணைக்கப்பட்டிருந்தனர்.